மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
நத்தம்.

**முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 17ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாச வருடம், பங்குனி திங்கள் 03ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.01/2023**

CNR No.TNDG100000142023

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.637/2019

எதிரிகளின் பெயர்கள் –

1. ராசு த/பெ.நல்லியப்பன்
2. செல்லத்துரை த/பெ.அழகு
3. நல்லியப்பன் த/பெ.அழகு
4. சுப்பிரமணி த/பெ.அழகு
5. ராமசாமி த/பெ.அழகு
6. அழகர்சாமி த/பெ.வளர்த்தான் அமபலம்
7. பூஞ்சோலை த/பெ.வளர்த்தான் அம்பலம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | |
| **CASE SUMMARY** | | | | |
| (i) | The period of remand of the accused | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | 1 . ராசு 34/2026 த/பெ.நல்லியப்பன் துவாரப்பதி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | -- | 23.09.2019 |
| | | 2. செல்லத்துரை 37/2026 த/பெ.அழகு துவாரப்பதி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | -- | 23.09.2019 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:02 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3. நல்லியப்பன் 63/2026 த/பெ.அழகு<br>துவாரப்பதி, நத்தம் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | 11.09.2019 | 11.09.2019 |
| | | | 4. சுப்பிரமணி 62/2026 த/பெ.அழகு<br>துவாரப்பதி, நத்தம் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | 11.09.2019 | 11.09.2019 |
| | | | 5. ராமசாமி 53/2026 த/பெ.அழகு<br>துவாரப்பதி, நத்தம் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | -- | 23.09.2019 |
| | | | 6. அழகர்சாமி 37/2026<br>த/பெ.வளர்த்தான் அமபலம்<br>துவாரப்பதி, நத்தம் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | -- | 23.09.2019 |
| | | | 7. பூஞ்சோலை 39/2026<br>த/பெ.வளர்த்தான்அம்பலம்<br>துவாரப்பதி, நத்தம் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | -- | 23.09.2019 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 10.09.2019 | 13.10.2019 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | | 12.08.2025ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:07 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | Filing of all miscellaneous petitions and their results | | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | | | Nil | | |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1 | திரு.தங்கபாண்டி | 11.09.2025 | 12.01.2026 |
| | | PW2 | திரு.ராஜா | 11.09.2025 | 12.01.2026 |
| | | PW3 | திருமதி.காந்திமதி | 11.09.2025 | 12.01.2026 |
| | | PW4 | திருமதி.வெள்ளையம்மாள் | 25.09.2025 | 12.01.2026 |
| | | PW5 | திரு.தங்கராஜ் | 25.09.2025 | 12.01.2026 |
| | | PW6 | திருமதி.தனலெட்சுமி | 04.02.2026 | 04.02.2026 |
| | | PW7 | திரு.பொன்ராஜ் | 12.02.2026 | 12.02.2026 |
| | | PW8 | திரு.பாண்டியன் | 26.02.2026 | 26.02.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 05.03.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Crl.M.P.No1783/2025 Dt.04.11.2025 u/s.311 petition filed and allowed. | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:11 +0530

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 09.09.2019 அன்று இரவு சுமார் 20.00 மணியளவில் சொத்துபிரச்சனை பற்றி துவராபதி ஊர் மந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் பேச சென்ற இவ்வழக்கின் வாதியின் தாயார் காந்திமதி என்பவரை 1வது எதிரி கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டியும், பின்னர் 10.09.2019ம் தேதி இரவு சுமார் 22.00 மணியளவில் வாதியும், அவரது தங்கை தனலெட்சுமி என்பவரும் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டியும், 1வது எதிரி தன் கையில் கொண்டு வந்திருந்த கம்பால் தாக்கி வாதியை தாக்கியும், மற்ற எதிரிகள் கையால் தாக்கி வாதிக்கு வலது முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு மற்றும் ஊமைக்காயங்களை ஏற்படுத்தியும், வாதியின் தங்கை தனலெட்சுமியை 1, 3 எதிரிகள் சேர்ந்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என வாதியை பார்த்து மிரட்டியதாக 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 248(1) கு.வி.மு.சவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | **எதிரிகள் நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை.** |

இவ்வழக்கு 04.01.2023ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இதில் இறுதியாக 05.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும்,

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:17 +0530

எதிரிகள் தரப்பில் திரு.P.நல்லியப்பன் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 148, 294(b), 452, 323, 506(i) இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 கீழும் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) **இறுதியறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கு :-**

கடந்த 09.09.2019 அன்று இரவு சுமார் 20.00 மணியளவில் சொத்துபிரச்சனை பற்றி துவராபதி ஊர் மந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் பேச சென்ற இவ்வழக்கின் வாதியின் தாயார் காந்திமதி என்பவரை 1வது எதிரி கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டியும், பின்னர் 10.09.2019ம் தேதி இரவு சுமார் 22.00 மணியளவில் வாதியும், அவரது தங்கை தனலெட்சுமி என்பவரும் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டியும், 1வது எதிரி தன் கையில் கொண்டு வந்திருந்த கம்பால் தாக்கி வாதியை தாக்கியும், மற்ற எதிரிகள் கையால் தாக்கி வாதிக்கு வலது முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு மற்றும் ஊமைக்காயங்களை ஏற்படுத்தியும், வாதியின் தங்கை தனலெட்சுமியை 1, 3 எதிரிகள் சேர்ந்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்து ஊமைக்காயத்தை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:23 +0530

ஏற்படுத்தியும், 1வது எதிரி ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என வாதியை பார்த்து மிரட்டியதாக எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 148, 294(b), 452, 323, 506(i) இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 01/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் 08.07.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினைப் பொறுத்து புலன்விசாரணை அதிகாரியால் 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 452, 323, 506(i) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 452, 323 இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழ் குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்து இருப்பினும் இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை குறித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 06:44:27 +0530

பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழும் எதிரிகள் குற்றச் செயலை செய்திருக்கலாம் என்பதற்கான முதற்நோக்கு சாத்தியக் கூறுகள் இருந்ததால் 12.08.2025ம் தேதியன்று 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழும் குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 240 கு.வி.மு.ச–வின் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7) கடந்த 09.09.2019 அன்று இரவு சுமார் 20.00 மணியளவில் சொத்துபிரச்சனை பற்றி துவராபதி ஊர் மந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் பேச சென்ற இவ்வழக்கின் வாதியின் தாயார் காந்திமதி என்பவரை 1வது எதிரி கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டியும், பின்னர் 10.09.2019ம் தேதி இரவு சுமார் 22.00 மணியளவில் வாதியும், அவரது தங்கை தனலெட்சுமி என்பவரும் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அனைவரும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:33 +0530

வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டியும், 1வது எதிரி தன் கையில் கொண்டு வந்திருந்த கம்பால் தாக்கி வாதியை தாக்கியும், மற்ற எதிரிகள் கையால் தாக்கி வாதிக்கு வலது முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு மற்றும் ஊமைக்காயங்களை ஏற்படுத்தியும், வாதியின் தங்கை தனலெட்சுமியை 1, 3 எதிரிகள் சேர்ந்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என வாதியை பார்த்து மிரட்டியதாக அ.சா.1 தங்கபாண்டி, அ.சா.8 சார்பு ஆய்வாளர் பாண்டியன் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

8) மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.8 சார்பு ஆய்வாளர் பாண்டியன் நத்தம் காவல்நிலைய குற்ற எண். 637/2019 சட்டபிரிவுகள் 147, 148, 294(பி), 452, 323, 506(1) இ.த.ச. மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். 11.09.2019ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு சம்பவ இடமான துவராபதியில் உள்ள வாதியின் வீட்டின் முன்பு வைத்து சாட்சிகள் அ.சா.2 ராஜா மற்றும் பட்டியல்சாட்சி 3 பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் வரைந்து அ.த.சா.ஆ.6 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் தங்கப்பாண்டி, ராஜா, பழனிச்சாமி, வெள்ளையம்மாள், காந்திமதி, தங்கராஜ், தனலெட்சுமி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் நல்லியப்பன் மற்றும் சுப்பிரமணி ஆகிய இருவரை 11.09.2019ம் தேதி 7.00 மணிக்கு நத்தம் பேருந்து நிலையத்தில் வைத்து காரணம்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 06:44:37 +0530

கூறி கைது செய்து தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற எதிரிகள் திண்டுக்கல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட தங்கப்பாண்டி என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.7 பொன்ராஜ் என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.3 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 13.10.2019ம் தேதி மேற்சொன்ன சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்கள்.

10) எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் எதிரிகள் குற்றமற்றவர் என்றும், எதிரிகள் புகாரை மிகைப்படுத்தி கூறியிருப்பதாகவும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் புலனாகியுள்ளதாகவும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:43 +0530

எதிர்வாதம் செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

11) **தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

**12) தீர்வு**

12.1) கடந்த 09.09.2019 அன்று இரவு சுமார் 20.00 மணியளவில் சொத்துபிரச்சனை பற்றி துவராபதி ஊர் மந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் பேச சென்ற இவ்வழக்கின் வாதியின் தாயார் காந்திமதி என்பவரை 1வது எதிரி கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டியும், பின்னர் 10.09.2019ம் தேதி இரவு சுமார் 22.00 மணியளவில் வாதியும், அவரது தங்கை தனலெட்சுமி என்பவரும் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டியும், 1வது எதிரி தன் கையில் கொண்டு வந்திருந்த கம்பால் தாக்கி வாதியை தாக்கியும், மற்ற எதிரிகள் கையால் தாக்கி வாதிக்கு வலது முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு மற்றும் ஊமைக்காயங்களை ஏற்படுத்தியும், வாதியின் தங்கை தனலெட்சுமியை 1, 3 எதிரிகள் சேர்ந்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கு இருந்தாலும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:47 +0530

உன் சாவு என் கையில் தாண்டா என வாதியை பார்த்து மிரட்டியதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது.

12.2) இவ்வழக்கு கோப்பினை பார்வையிடுகையில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தங்கபாண்டி நத்தம் காவல் நிலைய போலீசாரிடம் கொடுத்த புகார் மனுவான அ.த.சா.ஆ.1யில் "... *09.09.2019 அன்று இரவு சுமார் 8.00 மணி அளவில் சொத்து பிரச்சனையை ஊரில் வைத்து பேசி கொள்ளலாம் என்று எங்கள் ஊரை சேர்ந்த மேற்படி எதிரிகள் அழைக்கவும் என் அம்மா காந்திமதி சென்றார். நானும் அப்பாவும் உடன் சென்றோம். கூடத்தில் ராசு என்பவர் அந்த வீடு சின்னழகன் பேரில் உள்ளது. நீங்கள் உடனே வெளியேறுங்கள் என்று கூறியதற்கு என் அம்மா வெளியேற முடியாது என்று கூறியதற்கு கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டினார். என் அம்மா அவமானம் தாங்காமல் அழுது கொண்டே நான் காவல் நிலையம் போக போகிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு சென்று விட்டார். இன்று 10.9.2019 அன்று இரவு சுமார் 10.00 மணி அளவில் நானும் என் 1½ மாத கர்ப்பினியாக உள்ள என் தங்கை தனலெட்சுமி எங்கள் வீட்டில் இருந்த போது மேற்படி எதிரிகள் அத்துமீறி என் வீட்டிற்குள் நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டி விட்டு ராசு தான் கையில் கொண்டு வந்திருந்த கம்பால் என்னை சரமாரியாக தாக்கினார். நல்லியப்பனும் மற்ற ஆட்களும் கைகளால் மாறி மாறி அடித்தனர். இதில் எனக்கு வலது கை, முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு மற்றும் ஊமைக்காயங்களும் ஏற்பட்டது. எனது தங்கையை ராசுவும் அவரது அய்யா நல்லியப்பனும் சேர்ந்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்து விட்டனர். இதில் தனலெச்சுமிக்கு வலது தொடையில் ஊமைக்காயங்கள் ஏற்பட்டது. அனைவரும் சேர்ந்து தரையில் இழுத்து போட்டு பலமாக தாக்கினர். நாங்கள்*

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:53 +0530

*சத்தம் போட்டு அழறவும் ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என கூறிவிட்டு ஓடிவிட்டார் .........* " என்று நத்தம் காவல் நிலைய போலீசாரிடம் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1யில் குறிப்பிட்டுள்ளதை காணமுடிகிறது.

12.3) 1 முதல் 7 எதிரிகள் மீது பிரிவு 294(b) இ.த.சவின் கீழ் குற்றம் புரிந்துள்ளாரா என்பதை காணவேண்டியுள்ளது. பிரிவு பிரிவு 294(b) இ.த.சவின் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய ஒரு நபர் அசிங்கமான, அருவெறுக்கத்தக்க வார்த்தைகளை பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அவர்கள் கேட்கும்விதமாக சொல்லியிருக்க வேண்டும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு பிறர் முன்னிலையில் அவமானம் நேர்ந்து மன உழைச்சல் ஏற்பட்டு இருக்க வேண்டும். அதை பார்த்த பிற நபருக்கு அருவெறுப்பு ஏற்பட்டு இருக்க வேண்டும்.

12.4) வழக்கு கோப்புகளை பார்வையிடுகையில், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது புகாரில் அ.த.சா.ஆ.1ல், .... *கூடத்தில் ராசு என்பவர் அந்த வீடு சின்னழகன் பேரில் உள்ளது. நீங்கள் உடனே வெளியேறுங்கள் என்று கூறியதற்கு என் அம்மா வெளியேற முடியாது என்று கூறியதற்கு கோத்தா, கொம்மா, தேவிடியா என்று பலர் முன்னிலையில் திட்டினார். 10.9.2019 அன்று இரவு சுமார் 10.00 மணி அளவில் நானும் என் 1½ மாத கர்ப்பினியாக உள்ள என் தங்கை தனலெட்சுமி. எங்கள் வீட்டில் இருந்த போது மேற்படி எதிரிகள் அத்துமீதி என் வீட்டிற்குள் நுழைந்து ஏண்டா எங்க மேலயா போலீஸ் கேஸ் கொடுக்கப்போற தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார்"* என குறிப்பிட்டுள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:44:58 +0530

12.5) அ.சா.1 தங்கபாண்டி (புகார்தாரர்) தனது சாட்சியத்தில் எதிரி ராசு என்பவர் என் அம்மாவைப் பார்த்து நோத்தா, நொம்மா, தேவிடியா என்று அசிங்கமாக பேசினார் என்றும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 காந்திமதி தனது சாட்சியத்தில் ராசும், நல்லியப்பன் என்பவரும் என் மாமனார் சின்னழகன் என்பவர் பெயரில் பட்டா உள்ள வீட்டை நீங்கள் காலி செய்து விடுங்கள் என்று கூறினார். அதற்கு நாங்கள் காலி செய்ய முடியாது என்று சொன்னோம். தேவிடியா, அவுசாரி என்று அசிங்கமான வார்த்தைகளால் மேலும் மோசமான வார்த்தைகளாலும் பேசினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 வெள்ளையம்மாள் எதிரிகள் கெட்டவார்த்தை பேசியதாக எந்தவொரு இடத்திலும் கூறவில்லை. சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.5 தங்கராஜ் தனது சாட்சியத்தில் எதிரிகள் 7 பேரும் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் மகன் தங்கபாண்டியை கம்பால் அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது விலக்குவதற்கு சென்ற என் மகள் தனலெட்சுமியின் நைட்டியை பிடித்து இழுத்து கம்பால் தொடையில் அடித்து காயப்படுத்திக் கொண்டிருந்தபோது நான் சென்று விலக்கிவிட்டேன். அப்போது எதிரிகள் தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார் என்றும் சாட்சியமளித்துள்ளார். ஒவ்வொரு சாட்சியும் ஒவ்வொரு விதத்தில் எதிரிகள் தங்களை ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார் என்று தெரிவித்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் இவ்வழக்கு சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1–ன் வீட்டிற்கு அருகே வசிப்பவர்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது. புகார் மனுவும் சாட்சிகளின் சாட்சியங்களும் முரண்பட்டு உள்ளது. மேலும் சம்பவ இடத்தில் வேறு யாரும் இருந்ததாகவோ அவர்கள் எதிரிகள் பேசிய வார்த்தைகளை கேட்டதாகவும் அதனால் தங்களுக்கு அவமானம் நேர்ந்ததாகவோ எடுத்துரைக்கப்படவில்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:16 +0530

12.6) புகாரில் கூறிய வார்த்தைக்கும், சம்பவ சாட்சிகளான அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.6 ஆகியோர் எதிரிகள் பேசியதாக சொல்லும் நபர் குறித்து முரண்பட்டு கூறியிருப்பதில் இருந்து அரசு தரப்பில் கூறப்படுவது போல எந்த எந்த எதிரிகள் என்னென்ன ஆபாசமான வார்த்தைகளால் பேசினார்கள் என்பதை சந்தேகிக்கும் வகையில் அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்கள் அமைந்துள்ளதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளை பயன்படுத்தி பேசியதாகவோ, அதனால் அதனை கேட்ட சாட்சிகளுக்கு அருவறுக்கத்தக்க உணர்வு ஏற்பட்டதாக நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை. எனவே எதிரிகளின் மீதான பிரிவு 294(b)இ.த.சவின்ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

12.7) பிரிவு 506(i)யின் படியான குற்றச்சாட்டினை நிரூபிக்க மிரட்டல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் மிரட்டல் செய்யப்பட்டது என்பதையும் ஒரு நபர் ஒரு செயலை செய்யவோ, அல்லது தவிர்க்கவோ செய்யும் நோக்கத்தில் அவரது மனதில் அச்சத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டு அதனால் அந்த நபருக்கு அச்சம் ஏற்பட்டது என்பதையும் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். அ.சா.1 தனது புகார் மனு அ.த.சா.ஆ.1–ல் "*.... அனைவரும் சேர்ந்து தரையில் இழுத்து போட்டு பலமாக தாக்கினர். நாங்கள் சத்தம் போட்டு அழறவும் ராசு என்பவர் கம்பை காட்டி என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என கூறிவிட்டு ஓடிவிட்டார்*"... என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.1 தங்கபாண்டி தனது சாட்சியத்தில் " எதிரிகள் என்னைப் பார்த்து உன் சாவு என் கையில்தான் என்றும், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் ராசு என்பவர் மிரட்டிவிட்டு சென்றார்" என்றும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:21 +0530

காந்திமதி தனது சாட்சியத்தில் "ராசு என்பவர் என் மகனை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றுவிட்டார்" என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 வெள்ளையம்மாள் "என்னைக்கு இருந்தாலும் உன்னைக் கொல்லுவது நாங்கள்தான் என்று தங்கபாண்டியை மிரட்டிவிட்டு சென்றார்கள்" என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.5 தங்கராஜ் தனது சாட்சியத்தில் "என்னைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கையில்தான் என்று என் மகனைப் பார்த்து மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.8) மிரட்டல் என்று சொன்னதை மட்டும் கொண்டு இ.த.ச பிரிவு 506(i)ன் படியான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலாது. **S.P. Raja v. State, 2020 (3) MWN (Crl) 79** என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழங்கிய முன்தீர்ப்புரையை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேற்படி தீர்ப்பின் படி இ.த.ச பிரிவு 506(i)ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட நபருக்கு அச்சத்தை (Alarm) ஏற்படுத்தும் நோக்கத்துடன் அல்லது அந்த நபர் சட்டப்படி செய்ய வேண்டியிராத ஒரு காரியத்தைச் செய்யும்படி (அல்லது செய்யவிடாமல் தடுக்க) கட்டாயப்படுத்தும் நோக்கத்துடன் அந்த மிரட்டல் விடுக்கப்பட்டிருக்க வேண்டும். வெறும் கோபத்தில் உணர்ச்சிவசப்பட்டு கூறப்படும் வார்த்தைகள் அல்லது நிறைவேற்றும் எண்ணம் இல்லாத வெற்று மிரட்டல்கள் பிரிவு 506(i)–ன் கீழ் குற்றமாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உள்ளிட்ட பல உயர் நீதிமன்றங்கள் மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளன. அந்த மிரட்டலானது பாதிக்கப்பட்டவரின் மனதில் உண்மையான பயத்தை உண்டாக்கியிருக்க வேண்டும் மற்றும் மிரட்டல்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:26 +0530

விடுத்தவருக்கு அதைச் செயல்படுத்தும் எண்ணம் இருந்திருக்க வேண்டும். இவ்வழக்கில் அ.சா.1ற்கு அச்சம் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி விவசாயம் செய்ய விடமாட்டேன் என்ற வார்த்தையானது எதிரிகளால் கூறப்பட்டதாகவோ, அதனால் அ.சா.1ன் மனதில் அச்சம் ஏற்பட்டதாகவோ நிரூபிக்கின்ற வகையில் அரசு தரப்பு சாட்சியங்கள் இல்லாததால் 1வது எதிரி மீதான இ.த.ச பிரிவு 506(i)யின் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

12.9) 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 452, 324, இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 452, 323 இ.த.சவின் கீழும் குற்றச்சாட்டினை நிரூபிக்க எதிரிகள் கலகம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்து அடித்தும், பெண்ணின் மானத்திற்கு மானபங்கம் ஏற்படும் விதத்தில் செயல்பட்டு இருக்க வேண்டும். அ.சா.1 தனது சாட்சியத்தில் , ராசு மற்றும் நல்லியப்பன் ஆகியோர் கம்பை எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அடித்தார்கள். அவர்களுடன் சுப்பிரமணி, அழகர்சாமி, ராமசாமி, பூஞ்சோலை மற்றும் செல்லத்துரை என்பவர்களும் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கையால் எங்களை அடித்தார்கள். ராசு என்பவர் கம்பை வைத்து எனது வலது கை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் அடித்து சிராய்ப்பு காயங்களை ஏற்படுத்தினார். விலக்க வந்த என் தங்கையை ராசு என்பவரும், அவரது அப்பா நல்லியப்பன் என்பவரும் சேர்ந்து அடித்து நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார்கள். அதில் அவருக்கு ஊமைக் காயம் ஏற்பட்டது. அதனால்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:31 +0530

அவரது வலது தொடையில் பலத்த வீக்க காயம் ஏற்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.10) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 காந்திமதி தனது சாட்சியத்தில் "இரவு 10.00 மணியளவில் என் மகன் அ.சா.1 மற்றும் என் மகள் தனலெட்சுமியும், அவரது கைக்குழந்தையுடன் எங்கள் வீட்டில் இருந்தபோது, ராசு, நல்லியப்பன், சுப்பிரமணி, பூஞ்சோலை, ராமசாமி, அழகர்சாமி, செல்லத்துரை ஆகியோர் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ராசு கையில் வைத்திருந்த கம்பால் எனது மகனை வலது கை மற்றும் முதுகில் சரமாரியாக அடித்து காயப்படுத்தினார். அதைப் பார்த்து என் மகள் தனலெட்சுமி விலக்கிவிட வந்தபோது ராசு மற்றும் நல்லியப்பன் இருவரும் சேர்ந்து அவரது நைட்டியை பிடித்து இழுத்து வலது தொடையில் கம்பால் அடித்து காயப்படுத்தினார்கள். மற்ற எதிரிகள் அனைவரும் கையால் அடித்தார்கள்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.11) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 வெள்ளையம்மாள் தனது சாட்சியத்தில் " கடந்த 5 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் எங்கள் வீட்டிற்குள் இருந்தபோது, எதிரிகள் 7 பேரும் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து என் பேரன் தங்கபாண்டியையும், பேத்தி தனலெட்சுமியையும் கம்பு, தடிகளை கொண்டு அடித்தும், காலால் மிதித்தும் காயப்படுத்தினார்கள். அதில் அ.சா.1க்கு முதுகு மற்றும் உடம்பில் காயமும், தனலெட்சுமியை நைட்டியை கிழித்தும் அடி வயிறு மற்றும் இடுப்புக்கு கீழ் பகுதிகளில் மிதித்து ரத்தக் கட்டு காயங்களை ஏற்படுத்தினார்கள்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:39 +0530

12.13) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தங்கராஜ் தனது சாட்சியத்தில் "சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் எங்கள் வீட்டின் அருகில் உள்ள என் அம்மா வீட்டில் நான் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது எங்கள் வீட்டில் அலறல் சத்தம் கேட்டு போய் பார்த்தபோது, எதிரிகள் 7 பேரும் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் மகன் தங்கபாண்டியை கம்பால் அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது விலக்குவதற்கு சென்ற என் மகள் தனலெட்சுமியின் நைட்டியை பிடித்து இழுத்து கம்பால் தொடையில் அடித்து காயப்படுத்திக் கொண்டிருந்தபோது நான் சென்று விலக்கிவிட்டேன்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.14) சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.6 தனலெட்சுமி தனது சாட்சியத்தில் " 10.09.2019ம் தேதி இரவு 10.00 மணிக்கு எங்கள் வீட்டில் நான் எனது 1-1/2 மாத குழந்தை மற்றும் என் அண்ணன் அ.சா.1 ஆகியோர் இருந்தபோது ராசு, ராமசாமி, சுப்பிரமணி, பூஞ்சோலை, செல்லத்துரை, நல்லியப்பன் மற்றொருவர் பெயர் தற்போது ஞாபகமில்லை, அடையாளம் காட்டமுடியும், ஆகிய 7 பேரும் சேர்ந்து எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் அண்ணன் அ.சா.1ஐ தறதறவென ரோட்டில் இழுத்து சென்றார்கள், தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசி ராசு என்பவர் என் அண்ணனை கம்பாலும், மற்றவர்கள் கையாலும் சரமாரியாக அடித்தார்கள். நான் தடுக்க சென்றபோது என்னை ராசு என்பவர் கம்பால் வலது தொடையில் அடித்து வீக்கக்காயத்தை ஏற்படுத்தினார். நல்லியப்பன் என்பவரும் என்னை நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார். எனது அண்ணனுக்கு வலது கையிலும், நெற்றியிலும் ஊமைக்காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:44 +0530

12.15) பார்வை மகஜரான அ.த.சா.ஆ.6 மற்றும் வரைபடமான அ.த.சா.ஆ.5 ஆகியவை அ.சா.2 ராஜா, பட்டியல்சாட்சி 4 பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டதாக புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.2 ராஜா தனது சாட்சியத்தில் "சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் என் வீட்டின் முன்பாக அதிகாலை நேரத்தில் சார்பு ஆய்வாளர் வந்து நானும், பழனிச்சாமி என்பவரும் பேசிக் கொண்டிருந்தபோது எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். பின்னர் சம்பவ இடத்தை படம் வரைந்து எழுதி கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், பழனிச்சாமி என்பவரும் கையொப்பம் செய்தோம்" என்று சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "அ.சா.1 எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு முன்பாக பழனிச்சாமி என்பவருடன் அதிகாலை 3.00 மணியளவில் பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும். போலீசார் சம்பவ இடத்தை வரைபடம் வரைந்து அதில் கையொப்பம் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் மேற்படி மகஜர் சாட்சி அ.சா.1–ன் உறவினர் என்றும், காலை 3 மணி அளவில் ஆவணங்கள் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளதாக வழக்கிற்காக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதிகாலையில் சாட்சி பேசிக் கொண்டிருந்ததாக சொல்வது ஏற்புடையதல்ல என்றும், காவல் நிலையத்தில் வைத்து தான் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால்தான் அ.சா.1–ன் உறவினர் சாட்சியாக காட்டப்பட்டுள்ளார் என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும் மேற்படி வாதங்களை வைத்து மட்டும் முழுமையாக

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:49 +0530

நிராகரிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் சம்பவயிடத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது.

12.16) வாதியான தங்கபாண்டிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.7 பொன்ராஜ் தனது சாட்சியத்தில் "கடந்த 11.09.2019ம் தேதி மதியம் 3.10 மணியளவில் தங்கராஜ் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 10 நபர்கள் அவருடைய வீட்டில் வைத்து தாக்கியதாக தெரிவித்தார். அவர் உடம்பு முழுவதும் வலி இருப்பதாக தெரிவித்தார். அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கியதாக சாட்சியமளித்துள்ளார் அவர் தனது குறுக்குவிசாரணையில் "தங்கப்பாண்டி என்பவருக்கு வலது கை மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனது பதிவேட்டில் தங்கப்பாண்டி என்பவருக்கு காயங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தங்கப்பாண்டி என்பவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை, வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். தங்கப்பாண்டி என்பவரை மருத்துவமனைக்கு யாரேனும் அழைத்து வந்தார்களா என்றால் இல்லை, அவராகவே வந்தார். போலீசார் மெமோ குறித்து எனது அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவமானது 10.30 மணியளவில் நடந்ததாக விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.தங்கப்பாண்டி என்பவருக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதால் அவரது காயத்தின் தன்மை உதாரணமாக கன்றிப் போனதா, வீக்கக் காயமா என்பது குறித்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் **வெளிப்புறக் காயங்கள் இல்லை என்பதால் அதைக் குறிப்பிடவில்லை**. பொதுவாக ஒரு நபர் கீழே விழுந்தால் நான் சொல்லும் வலி ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான்" என்றும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:45:54 +0530

சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் மருத்துவரிடம் அ.சா.1 சிகிச்சைக்கு சேர்ந்த போது 10 நபர்கள் தன்னை தாக்கியதாக கூறியுள்ள நிலையில் ஏழு நபர்கள் மீது மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மருத்துவரிடம் காயத்துடன் இருக்கும்போது அளிக்கும் விபரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தர தேவையில்லை என்று பல வழக்குகளில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் முன்தீர்ப்புக்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்த மேற்படி எதிரிகள் தரப்பு வாதம் நிராகரிக்கப்படுகிறது.

12.17) அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "நான் புகாரில் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.... எனது வீடு கிழக்கு திசை பார்த்த வீடு ஆகும். வீட்டில் முன் பகுதியில் வறாண்டா போன்ற அமைப்பு உள்ளதா என்றால் இல்லை, ஹால் உள்ளது, அதற்கு அடுத்து ரூம் உள்ளது, ஹாலின் அளவுகள் தெரியாது. அத்தியாவசியமான பொருட்கள் ஹாலில் உள்ளது என்றாலும், ஹால் சிறிதாக இருக்கும் என்றாலும் சரிதான். வீட்டில் பொருட்களுக்கு சேதாரம் ஏற்படவில்லை என்றால் சரிதான்... "என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "...மருத்துவமனைக்கு எப்பொழுது சென்றோம் என்றால் நானும் எனது அண்ணனும் சம்பவம் நடந்த அன்றைய தினமே இரவு 11.00 மணி அளவில் சென்றோம். நான் மட்டும் வெளி நோயாளியாக மருத்துவம் பார்த்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் ஊமை காயம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கன்றிப்போன காயமா வீக்க காயமா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்... சம்பவத்தின் காரணமாக வீட்டில் பொருட்கள் ஏதும் உடையவோ, சேதாரம் ஏற்படவோ இல்லை என்றால் சரிதான்... சம்பவம் நடந்து யார் யார் வந்தார்கள் என்றால் எனது அம்மா, அப்பா,

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:02 +0530

பக்கத்து வீட்டை சேர்ந்த பழனிச்சாமி, அவரது மனைவி வீரம்மாள் ஆகியோர் வந்தார்கள்..." என்று தெரிவித்துள்ளார். மேற்படி பழனிச்சாமி மற்றும் வீரம்மாள் ஆகியோர் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை.

12.18) புலன்விசாரணை அதிகாரி அ.சா.8 தனது குறுக்குவிசாரணையில் "...புகார் மனு மற்றும் புலன் விசாரணையின்படி வீட்டிற்குள் சம்பவம் நடந்ததாகதான் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டின் முன்பு நடந்துள்ளது. புகார் மனுவில் எதிரிகள் வீட்டிற்குள் அத்துமீறி உள் நுழைந்து 1, 2 வாதிகளை அடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல, வீட்டிற்குள் சம்பவம் நடந்து அதன் தொடர்ச்சியாக வீட்டிற்கு வெளியேயும் சண்டை தொடர்ந்துள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, வீட்டு வாசல் மற்றும் அதனைத் தொடர்ந்து தட்டி வைத்து அடைக்கப்பட்டிருந்ததில் அத்துமீறி உள்ளே வந்ததால்தான் வழக்கு எழுந்துள்ளது..." என்று தெரிவித்துள்ளார்.

12.19) பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை பார்வையிட்டதில் இருந்தும் புலன்விசாரணை அதிகாரியின் குறுக்குவிசாரணையில் பார்வை மகஜரில் சம்பவ இடமானது தங்கப்பாண்டி வீட்டிற்குள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவம் வீட்டிற்குள் நடந்ததாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் வீட்டின் உள்ளே எந்த பகுதியில் சம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் வீட்டின் அமைப்பு மற்றும் அதன் அளவு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:09 +0530

வீட்டின் எந்த பகுதியில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

12.20) காயம்பட்ட சாட்சிகளுடைய சாட்சியமானது நம்பகத்தன்மையுடையதாக இருப்பின் அதன் அடிப்படையில் மட்டும் வழக்கு நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலும். ஆனால், இவ்வழக்கைப் பொருத்தவரை காயம்பட்ட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்களுக்கிடையே முரண்பாடுகள் உள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவம் முழுவதும் தனது வீட்டிற்குள் நடந்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.6 அதற்கு முரண்பட்டு அ.சா.1–யை வீட்டிலிருந்து வெளியே ரோட்டிற்கு இழுத்துச்சென்று அடித்ததாக தெரிவித்துள்ளார். மற்ற கண்ணுற்ற சாட்சிகள் சம்பவம் வீட்டிற்குள் நடந்ததாக தான் தெரிவித்துள்ளார்கள். அதேபோல் அ.சா.6–யையும் பொது இடத்தில் வைத்து அடித்ததாக அவரது சாட்சியம் மூலம் அறிய முடிகிறது. ஆனால் புகார் மனுவிலும், மற்ற சாட்சிகளும் ரோட்டில் வைத்து சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கவில்லை. பொது இடத்தில் வைத்து சம்பவம் நடைபெற்று இருந்தால் அ.சா.1–ன் வீட்டிற்கு அருகே வசிப்பவர்கள் சம்பவத்தை பார்த்திருப்பார்கள். எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது போல் இவ்வழக்கில் அ.சா.1–ன் நெருங்கிய உறவினர்களை தவிர ஊர் மக்கள் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதாலும், அ.சா.4 மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய முடியும் நிலையிலும், மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளதாலும், அரசு தரப்பு வழக்கு பாதிப்படைந்துள்ளது.

12.21) மேலும் புகார் மனுவில் தனலெட்சுமி என்பவர் 1–½ மாத கர்பிணி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தனலட்சுமி என்பவருக்கு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:14 +0530

ஒன்றரை மாத கைக்குழந்தை உள்ளது என்றும், புகார் மனுவில் தவறுதலாக அவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக சாட்சிகள் தெரிவித்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கை பெரிதுபடுத்தி எதிரிகளை வழக்கில் சிக்க வைக்கவே அவ்வாறு மிகைப்படுத்தி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. புகாரின் உண்மை தன்மை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. மேலும் எதிரி தரப்பில் 7 பேர் சேர்ந்து கம்பால், கைகளால் அடிக்கும் போது வீக்ககாயம் மற்றும் கன்றிய காயம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றும், ஆனால் அ.சா.1–ற்கு வெளிப்புற காயங்கள் என்று இருந்ததாக மருத்துவர் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் மருத்துவ ஆவணத்திலும் அ.சா.1–ற்கு காயம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றும், எதிரிகளை பழிவாங்கவே அ.சா .1 தனக்கு வலி இருந்ததாக தெரிவித்துள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. மேலும், அ.சா.6 மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பது இதன் மூலம் தெரியவருகிறது. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6ன் உறவினர்கள் என்றும், அவர்களுக்குள் முன்பகை உள்ளது என்பதையும் அவர்களே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மேற்படி முன்பகை காரணமாக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. தரப்பினர்களுக்கிடையே சொத்து பிரச்சனை உள்ளது என்பதை அறிய முடிகிறது. சம்பவயிடத்திற்கு அருகில் வசிக்க கூடிய நபர்கள் யாரும் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி காரணங்களின் அடிப்படையில் அ.சா.1 மற்றும் அ.சா.6–ற்கு எதிரிகளால் தான் காயம் ஏற்பட்டது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. வழக்கில் கூறப்படுவது போல சம்பவம் நடைபெற்றதா? என்பதை சந்தேகிக்கும் வகையில் அரசு தரப்பு சாட்சியங்கள் இருப்பதாலும் சந்தேகத்தின் பலன் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:20 +0530

12.22) மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் Anand Ramachandra Chougule vs Sidarai Laxman Chougala and others (2019 3 SCC Crl.309) வழக்கில் அரசு தரப்பு தனது வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரிக்கு எதிராக நிரூபிக்க வேண்டியது அவசியம் என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்கள் சந்தேகிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும், மேற்படி சாட்சிகள் அக்கறையுள்ள சாட்சிகளாக உள்ளதாலும் அவர்களது சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது பாதுகாப்பற்றது என்பதாலும், சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு கிடைக்ககூடியது என்பது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடு என்பதாலும், சந்தேகத்தின் பலன் குற்றச்சாட்டப்பட்ட நபருக்கு கிடைக்க கூடியது என்பதால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

**13.** இறுதியாக, 1வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 324, 506(1) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 3வது எதிரி மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 (2 எண்ணிக்கை) இ.த.ச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும், 2, 4, 5, 6, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(b), 452, 323 இ.த.சவின் கீழும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 248(1) கு.வி.மு.சவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:25 +0530

ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் வழக்குச் சொத்து கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 17.03.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 06:46:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 11.09.2025 | திரு.தங்கபாண்டி (புகார்தாரர்) |
| அ.சா.2 | 11.09.2025 | திரு.ராஜா (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.3 | 11.09.2025 | திருமதி.காந்திமதி (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | 25.09.2025 | திருமதி.வெள்ளையம்மாள் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.5 | 25.09.2025 | திரு.தங்கராஜ் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.6 | 04.02.2026 | திருமதி.தனலெட்சுமி (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.7 | 12.02.2026 | திரு.பொன்ராஜ் (மருத்துவர்) |
| அ.சா.8 | 26.02.2026 | திரு.பாண்டியன் (புலன்விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 10.09.2019 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.2 | 11.09.2019 | பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.7 | 11.09.2019 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயகருத்துரை (தங்கபாண்டி) |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.4 / அ.சா.8 | 10.09.2019 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.8 | 11.09.2019 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.8 | 11.09.2019 | பார்வைமகஜர் |

**<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>**– இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>**–

இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 06:46:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.